2021 பிப்ரவரி 4]

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய பகுதியில் 50 சதவிகிதம் புதைவடத் தடமாக இருக்கின்றது. மீதமுள்ள பகுதிகளுக்கும் புதைவடத் தடம் வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கின்றபொழுதே சென்னை மாநகரம் முழுவதுமே புதைவடத் தடம் அமைக்க வேண்டுமென்று உத்தரவிட்டு, பல்வேறு பகுதிகளில் அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்பொழுதுகூட, அந்தப் பகுதியில் புதைவடத் தடம் அமைப்பதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற பகுதியில், அந்தப் பணி நடைபெறுகின்றதா என்பதை ஆய்வு செய்து, அவ்வாறு இல்லையென்று சொன்னால் மாண்புமிகு உறுப்பினரின் நியாயமான கோரிக்கை உடனடியாக ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. இரத்தினசபாபதி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

4—

சமுதாயக் கூடம்

***7797—திரு. ஏ. இரத்தினசபாபதி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தொகுதி, அரிமளம் ஒன்றியம், இரும்பாநாடு வீரமாகாளியம்மன் கோயில் முன்பாக சமுதாயக் கூடம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொரோனா வைரஸ்*

நோய் உலகத்தையே அச்சுறுத்தியது. அந்த நேரத்தில் வீட்டின் அறைக்குள் அமர்ந்து வீர வசனம் பேசிய தலைவர்கள் மத்தியிலே, தன்னைப் பற்றிக் கவலைப்படாமல் நாட்டு மக்கள்தான் முக்கியம் என்று ஒவ்வொரு மாவட்டமாக நேரடியாகச் சென்று ஆய்வு செய்து, பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து, கொரோனா நோய்த் தொற்றினைக் கட்டுப்படுத்திய, மருத்துவக் கல்லூரி மாணவர் சேர்க்கையில் 7.5 சதவிகிதம் உள் ஒதுக்கீடு கொடுத்த, 2,000 மினி கிளினிக்குகளை மக்களுக்காக அமைத்துக் கொடுத்த (மேசையைத் தட்டும் ஒலி) ஒரே முதலமைச்சர், ஒப்பற்ற முதலமைச்சர், 2021 ஆம் ஆண்டிலே மீண்டும் முதலமைச்சராகப் பதவியேற்கக்கூடிய அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 2021–ல் நடைபெறும் சட்டமன்றத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக அண்ணன் எடப்பாடியார் அவர்களை அறிவித்து, முழுமையாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசைக் கட்டிக்காப்பதற்கு உறுதுணையாக இருக்கும் ஜல்லிக்கட்டு நாயகன், எங்களது அருமை அண்ணன் மாண்புமிகு ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன்.

முற்பகல் 10–40

(அ) மற்றும் (ஆ) அறந்தாங்கி தொகுதி, அரிமளம் ஒன்றியம், இரும்பாநாடு வீரமாகாளியம்மன் கோயில் முன்பாக சமுதாயக் கூடம் அமைப்பது குறித்த கோரிக்கை, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. இரத்தினசபாபதி அவர்கள்.*

திரு. ஏ. இரத்தினசபாபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறந்தாங்கி நகர மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும்முகமாக பூங்கா அமைப்பதற்கும் மற்றும் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் 6 கோடி ரூபாயை அள்ளி வழங்கிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் போராட்டக்காலத் தளபதிகள் அண்ணன் இ.பி.எஸ். அவர்களுக்கும், அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களுக்கும், நல்லாட்சியில் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருக்கின்ற*

2021 பிப்ரவரி 4]

அண்ணன் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எனது தொகுதியிலுள்ள இரும்பாநாடு வீரமாகாளியம்மன் கோயில் முன்பாக சமுதாயக் கூடம் அமைத்துக் கொடுத்தால் அந்தப் பகுதி மக்களுடைய ஆதரவை மட்டுமல்ல; அந்த வீரமாகாளியம்மன் ஆசியையும் நாம் பெற்றுக்கொள்ள முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாது, இந்தச் சபையிலே பலமுறை தங்களிடம் வைத்த கோரிக்கை இது. தஞ்சை மாவட்ட சத்திரம் நிருவாகத்தில் சிக்கிக் கிடக்கின்ற எங்களுடைய அறந்தாங்கி சந்தையை மீட்டுத் தருமாறும், அறந்தாங்கி பேருந்து நிலையத்தை விரிவாக்கம் செய்து தருமாறும் இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

ஏசுபிரான் அவர்கள், "கேளுங்கள் தரப்படும், தட்டுங்கள் திறக்கப்படும்" என்றார். ஆனால், இன்றையதினம் மரத்தடியிலே உட்கார்ந்து கொண்டு மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்ற மாயாஜாலக்காரர்கள் மத்தியிலே, கேட்காமலேயே தருகின்ற, தட்டாமலேயே திறக்கின்ற ஆட்சி மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி)

கற்பகத் தருவாய், காமதேனுவாய் இந்த நாட்டு மக்களுக்கு அள்ளி, அள்ளி வழங்கிய ஆட்சி, அம்மாவினுடைய ஆட்சி; யாருமே எதிர்பாராத அளவிற்கு பொங்கலுக்கு 2,500 ரூபாயை அள்ளி வழங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) ஏழையெளிய மக்களின் வாழ்விலே ஒளியேற்றிய ஆட்சி, அம்மாவினுடைய ஆட்சி. இந்த அம்மாவினுடைய ஆட்சியிலே கேட்கின்ற திட்டங்களையெல்லாம் நிறைவேற்றித் தருகின்ற தலைவர்களுக்கெல்லாம் எங்களுடைய நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டு, நாங்கள் வைக்கின்ற இந்தக் கோரிக்கையையும் நிறைவேற்றித் தருமாறு வேண்டி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, அரிமளம் ஒன்றியம், இரும்பாநாடு ஊராட்சியிலே 403 வீடுகள் உள்ளன; ஊராட்சியின் மொத்த மக்கள் தொகை 1,834 ஆகும். இரும்பாநாடு ஊராட்சி, வீரமாகாளியம்மன் கோயில் அருகில்*

2 கி.மீ. தொலைவில் உள்ள மறவன்வயல் என்ற குக்கிராமத்தில் சமுதாயக் கூடம் ஒன்று பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது. அந்தச் சமுதாயக் கூடம் 125 மக்கள் அமரும் வகையில் 1,250 சதுர அடியில் கட்டப்பட்டுள்ளது. பொதுவாக, ஊராட்சிப் பகுதிகளில் சமுதாயக் கூடங்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்படுகின்றன. இருந்தாலும்கூட, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி அமைந்த 2011 ஆம் ஆண்டிற்குப் பிறகு, பல்வேறு சமுதாயக் கூடங்கள் சுய உதவிக் குழுக் கட்டடம் என்று பல்வேறு திட்டங்களின் மூலமாகக் கட்டப்பட்டு, சமுதாயக் கூடங்களாகவும் பயன்படுத்தப்படுகின்றன. இரும்பாநாடு வீரமாகாளியம்மன் கோயில் முன்பாக சமுதாயக் கூடம் கட்டுவதற்கு 42 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இந்தக் கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. இரத்தினசபாபதி அவர்கள்.*

முற்பகல் 10—45

திரு. ஏ. இரத்தினசபாபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயக் கூடம் கட்ட பரிசீலித்து, கட்டித் தரப்படும் என்று சொன்னதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மீண்டும் நினைவுபடுத்துகின்றேன். இந்தச் சந்தையையும், பேருந்து நிலைய விரிவாக்கத்தையும் 6 கோடி ரூபாய் கொடுத்து இன்றைக்கு அடிப்படை வசதிகளை செய்து கொடுப்பதற்கு அன்புள்ளம் கொண்டு செயல்படுத்திய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இந்த சந்தைப்பேட்டையை அறந்தாங்கிக்கு மீட்டுத் தருமாறு உங்களை அன்புடன் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

2021 பிப்ரவரி 4]

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறந்தாங்கி சந்தை தொடர்பான கோரிக்கையை நீண்டகாலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்துக் கொண்டிருக்கின்றார். ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புகளுக்கும் இருக்கக்கூடிய பிரச்சினை இது. ஊராட்சியினுடைய, பேரூராட்சியினுடைய, அந்தப் பகுதியில் உள்ள நகராட்சியினுடைய வருமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினை இது. அந்த வருமானத்தை வைத்துதான் பல்வேறு நடவடிக்கைகளை எடுக்கிறார்கள். இருந்தாலும்கூட, அவர் கேட்பது ஒரு நியாயமான கோரிக்கை. அதற்காக பல்வேறு முறை* meeting *நடத்தப்பட்டிருக்கிறது. மீண்டும் ஒரு முறை கண்டிப்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்துப் பேசி, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, அந்தப் பேருந்து நிலையத்தைப் பற்றியும் குறிப்பிட்டார். அதுவும் அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல் அவர்கள்.*

திரு. எ.பி. சக்திவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு தந்த சரித்திர நாயகர், மாணவ சமுதாயத்திற்கு மகத்தான நல்ல திட்டங்களையெல்லாம் வாரி வழங்கிய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசியல் வழிகாட்டி, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களையும், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்குகிறேன். இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழியிலே நல்லாட்சி நடத்தி வருகின்றார் நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர். மக்களெல்லாம் போற்றுகின்ற நம்மில் ஒருவராக, நமக்கான முதல்வராக செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற, இன்றையதினம் மக்கள் முதல்வராக பணியாற்றிக் கொண்டிருக்கின்ற அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய பொற்கால ஆட்சிக்கு உறுதுணையாக இருந்து கொண்டிருக்கின்ற, கொங்குநாட்டினுடைய தங்கத்திற்கு அரவணைப்பாகவும், ஒத்துழைப்பாகவும் இருக்கக்கூடிய தென்பாண்டியினுடைய சிங்கம், அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன். அதேபோன்று உள்ளாட்சித்*

துறையிலே மத்திய அரசாங்கத்தினால் வழங்கப்படுகிற பல்வேறு விருதுகளையெல்லாம் பெற்று, அம்மா அவர்களுடைய நல்லாட்சிக்கு நற்சான்றிதழ்களைப் பெற்றுத் தந்திருக்கின்ற மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும், பேசுவதற்கு வாய்ப்பு வழங்கிய தங்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகராட்சி, சேலம் தெற்கு சட்டமன்றத் தொகுதியிலே 58–வது கோட்டத்திலே செல்லக்குட்டிக்காடு என்கின்ற இடம் உள்ளது. அடிப்படை வசதிகள் ஏதுமின்றி, கூலி வேலைக்குச் செல்லக்கூடிய தொழிலாளர் பெருமக்கள் அதிகம் வசிக்கின்ற பகுதி இது. அதேபோல், 37–வது கோட்டத்திலே உள்ள குமரிகிரிப்பேட்டை, கடைநிலையிலே நின்று கூலி வேலைக்குச் செல்கின்ற விசைத்தறி நெசவாளர்கள் வசிக்கின்ற பகுதி. அதேபோன்று 45–வது கோட்டம், பஞ்சந்தாங்கி ஏரியானது, கூலி வேலைக்குச் செல்கின்ற மக்கள் வசிக்கின்ற பகுதி. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதுபோல, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து, சேலம் தெற்கு சட்டமன்றத் தொகுதியிலே நான்கு சமுதாயக் கூடங்கள் கட்டிக் கொடுத்திருந்தபோதிலும், இந்த மூன்று பகுதிகளில் உள்ள பொது மக்களின் அத்தியாவசியத் தேவைக்காக ஒரு சமுதாயக் கூடம் அமைப்பது இன்றியமையாத ஒன்றாக இருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அங்கு சமுதாயக் கூடத்தை அமைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும்.

அதேபோன்று, 37–வது கோட்டத்தில் இருக்கக்கூடிய அண்ணா நகர் பகுதி, 58–வது கோட்டம், செல்லக்குட்டிக்காடு, சீரநாயக்கன்பட்டி மற்றும் 60–வது கோட்டம் மாரியம்மன் கோயில் அருகிலும் சமுதாயக் கூடத்தை அமைத்துக் கொடுக்க வேண்டுமாய் தங்களின் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் மேலான பார்வைக்கு எடுத்துச்செல்கின்றேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகராட்சிப் பகுதியில் குறிப்பிட்ட மூன்று கோட்டங்களிலே சமுதாயக் கூடம் வேண்டுமென்று

கேட்டிருக்கின்றார். குறிப்பாக, நெசவாளர்கள் அதிகம் வசிக்கின்ற பகுதி என்றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே 2011–க்குப் பின்னால், கிட்டத்தட்ட மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் 205 சமுதாயக் கூடங்கள் கட்டப்பட்டுள்ளன. மொத்தமாக எடுத்துக்கொண்டால், சென்னை மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பாக 3,225 சமுதாயக் கூடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இருந்தாலும்கூட, மாநகராட்சிப் பகுதிகளிலே சமுதாயக் கூடம் கட்டுவதற்குத் தேவையான இடங்கள் விலை மதிப்புள்ளவையாக இருக்கின்ற காரணத்தினால், அதிகமான இடங்களில் கட்ட இயலவில்லை. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தத் தொகுதி மக்களின்மேல் உள்ள அக்கறையின்பால் கேட்டிருக்கின்றார்கள். அப்படி அவர் குறிப்பிட்டுக் கேட்ட காரணத்தினால், இதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி அவர்கள்.*

முற்பகல் 10–50

திரு. ஆ. கோவிந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தந்த தலைவியாக வாழ்ந்த பொன்மனத் தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, அம்மா அவர்களினுடைய அரசை இன்றைக்கு வலிமையோடு வழிநடத்திச் சென்று கொண்டிருக்கின்ற, அம்மாவின் ஆசைகள் அனைத்தையும் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்ற, போற்றுதலுக்குரிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், அவருக்கு உறுதுணையாக இருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன். அரியர் வைத்திருக்கும் மாணவர்களை எல்லாம்* pass *செய்திடத் தேவையான அரசாணையை வெளியிட்டு, அதைத் துடிப்போடு செயல்படுத்திட நடவடிக்கை மேற்கொண்டிருக்கின்ற எங்கள் மாவட்டக் கழகச் செயலாளர்,*

எங்கள் மட்டற்ற மரியாதைக்குரிய மாண்புமிகு அண்ணன் உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தொகுதிக்குட்பட்ட வத்தல்மலை கிராமம், ஒரு மிகப் பெரிய சுற்றுலாத் தலமாக அமையவிருக்கிறது. அந்தக் கிராமத்தில் ஏறக்குறைய 1,300 குடும்பங்கள் வசித்து வருகின்றன. அங்கொரு சமுதாயக் கூடத்தையும், அதேபோல, கொண்டம்பட்டி ஊராட்சியில் உள்ள முருகன் கோயிலில் பல்வேறு சமயங்களில் திருமணங்கள் நடைபெற்று வருவதால் அங்கொரு சமுதாயக் கூடத்தையும் கட்டித் தர வேண்டும். மேலும், சோலைக்கொட்டாய் பகுதியில் இருக்கின்ற சமுதாயக் கூடம் மிகவும் பழுதடைந்த நிலையில் இருப்பதால், அதைப் புதுப்பித்து ஒரு சமுதாயக் கூடத்தைக் கட்டித் தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவற்றிற்கெல்லாம் தேவையான நிதியை அரசாங்கம் தற்பொழுது ஒதுக்குவதில் சிரமம் இருந்தாலும்கூட எங்கள் மாவட்டத்திற்கென, மாண்புமிகு முன்னாள் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த அண்ணன் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள், SEDP திட்டத்தின்மூலம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்திலே அதிகமாக நிதியைக் கேட்டுப் பெற்றுத் தந்திருக்கின்றார்கள். அந்தத் திட்டத்தின்மூலம் இந்தப் பகுதிகளுக்கு நிதியை உடனடியாக ஒதுக்கித் தருமாறு தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊராக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வத்தல்மலை கிராமம் மற்றும் இரண்டு கிராமங்களுக்கும் சேர்த்து, 3 பகுதிகளில் சமுதாயக் கூடம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார். இன்றைக்கு ஊரக வளர்ச்சித் துறையின் சார்பாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, கிராமங்களில் 2011–2016 ஆட்சிக் காலத்தில் 2,224 சமுதாயக் கூடங்களையும், 2016–க்குப் பின்னர், 712 சமுதாயக் கூடங்களையும் கட்டித் தந்திருக்கிறது. இதற்காக கிட்டத்தட்ட 350 கோடி ரூபாய்

2021 பிப்ரவரி 4]

நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், ஒவ்வொரு ஊராட்சியிலும் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்டுவதற்காக, கிட்டத்தட்ட 70 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, அந்த நிதியிலிருந்து சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கை மற்றும் பொது மக்களுடைய கோரிக்கையை ஏற்று ஒரு பிரமாண்டமான கட்டடம் கட்டி, கிட்டத்தட்ட 90 சதவிகிதப் பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு அத்தகைய வாய்ப்புகள் இருக்கும்போது அதைப் பயன்படுத்தியிருக்கலாம். இருந்தாலும், சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அந்தத் தொகுதி மக்களின்மேல் உள்ள அக்கறையால் இவ்வளவு கோரிக்கைகளை வைத்திருக்கிறார். அதேபோல, தற்போதைய மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், முன்னாள் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோது, சிறப்பாக நம்முடன் பணியாற்றி, பல்வேறு திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறார் என்பது எங்களுக்கும் தெரியும். இருந்தாலும், இதுவரை இல்லாத வகையில் தருமபுரி மாவட்டத்திலே மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பல்வேறு கோரிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று எங்கள் துறையின் மூலமாக பல்வேறு திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறார். இந்தக் கோரிக்கையும் கண்டிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 5, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.*

வினா வரிசை எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

6—

அங்கன்வாடி மையம்

***26862—திரு. பி. முருகன்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—